www.Padasalai.Net www.CBSEtips.in

TNJR Reg.No. [ | | | | | | ]

# இரண்டாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு – 2019

காலம்:2.00மணி வகுப்பு – 6 மதிப்பெண்கள்: 60

## சமூக அறிவியல்

### பிரிவு – அ

I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. ஆரியர்கள் முதலில் .......... பகுதியில் குடியமர்ந்தனர்.
   அ) பஞ்சாப் ஆ) காஷ்மீர் இ) வடகிழக்கு ஈ) கங்கை சமவெளியின் மத்திய பகுதி
2. சித்தார்த்த கௌதமர் குறித்து கீழே காண்பனவற்றுள் ஒன்றைத் தவிர மற்ற அனைத்தும் சரி
   அ) இந்து மதத்தை நிறுவியவர் அவரே ஆ) அவர் நேபாளத்தில் பிறந்தார்
   இ) அவர் நிர்வாணம் அடைந்தார் ஈ) அவர் சாக்கியமுனி என்று அறியப்பட்டார்
3. நான்கு மகாஜனபதங்களில் மிகவும் வலிமையான அரசு எது?
   அ) அங்கம் ஆ) மகதம் இ) கோசலம் ஈ) வஜ்ஜி
4. வாக்கியம்: மனிதன் விவசாயம் செய்ய தீர்மானித்தான்
   புரிதல் 1: உணவு சேகரித்து வந்த மனிதனுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது
   புரிதல் 2: மனிதன் சேகரித்த உணவு ஊட்டமிக்கதாக இல்லை
   சரியான விடையைத் தேர்ந்தெடு
   அ) புரிதல் 1 மட்டும் சரி ஆ) புரிதல் 2 மட்டும் சரி இ) புரிதல் 1 மற்றும் 2 தவறு
   ஈ) புரிதல் 1 மற்றும் 2 சரி
5. தேசிய கீதத்தை இயற்றியவர் .........
   அ) தேவேந்திரநாத் தாகூர் ஆ) பாரதியார் இ) ரவீந்திரநாத் தாகூர் ஈ) பாலகங்காதர திலகர்
6. இந்திய குடிமக்களின் வாக்குரிமைக்கான வயது ........
   அ) 18 ஆ) 21 இ) 24 ஈ) 16
7. வேளாண்மைசார் தொழிற்சாலை
   அ) பருத்தியாலை ஆ) மரச்சாமான்கள்

II. கோடிட்ட இடத்தை நிரப்பு. 7 x 1 = 7

8. கீழடி ............ மாவட்டத்தில் அமைந்துள்ளது.
9. ............ என்பது புத்தரின் உடல் எச்சங்கள் மீது கட்டப்பட்டனவாகும்.
10. மௌரியப் பேரரசை தோற்றுவித்தவர் ............
11. இயற்கை வளங்களை சேகரித்தல் ............
12. இந்தியாவின் தேசியக்கனி ............
13. அனைத்து குடிமக்களுக்கும் சில ............ உரிமைகளும் உண்டு.
14. தானியங்களை உற்பத்தி செய்பவர்கள் ............

III. பொருத்துக 5 x 1 = 5

15. பிட்சுக்கள் – புதுபிக்க இயலாது

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



16. கொடுமணல் - ஆகஸ்ட் 15
17. நிலக்கரி - சுழல் அச்சுக்கள்
18. சுதந்திரதினம் - பண பரிவர்த்தனை
19. வங்கி - துறவிகள்

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி 4 x 2 = 8**

20. வேதகால மக்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகள் யாவை?
21. சமணத்தின் மூன்று ரத்தினங்கள் யாவை?
22. வளங்கள் என்றால் என்ன?
23. தேசிய இலச்சினையின் அடிபாகத்தில் இடம் பெற்றுள்ள விலங்குகள் எவை?
24. அடிப்படை உரிமைகள் என்றால் என்ன?
25. வணிகம் என்றால் என்ன?

**V. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி 4 x 3 = 12**

26. கொடுமணலிலுள்ள தொல்லியல் ஆய்விடம் குறித்து சுருக்கமாக எழுதுக.
27. பௌத்தத்தின் எட்டு நெறிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
28. வளப்பாதுகாப்பை பற்றி காந்தியடிகளின் சிந்தனை என்ன?
29. மகதத்தின் எழுச்சிக்கான காரணங்களில் ஏதாவது மூன்று கூறுக.
30. தேசிய கொடியில் உள்ள நிறங்கள் குறிப்பன எவை?
31. முகப்புரை என்றால் என்ன?
32. நகரங்களின் அம்சங்களாக நீ அறிவன யாவை?

**VI. உயர் சிந்தனை வினாக்கள் (ஏதேனும் 3 மட்டும்) 3 x 5 = 15**

33. நீ அசோகரைப் போன்ற ஒரு அரசராக இருந்தால் மேற்கொள்ளும் ஏதேனும் ஐந்து நலத்திட்டங்களை எழுதுக.
34. இந்திய நாணயத்தின் குறியீட்டின் வடிவத்தை வரைந்து வரையறுக்கவும்.
35. பண்டமாற்று முறை மற்றும் சேமிப்பு என்றால் என்ன?
36. குருநில கல்விமுறைக்கும் நவீன கல்விமுறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

**VII. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும். (இந்தியா ஆறு வரைபடம்) 6 x 1 = 6**

37. அ) மொகஞ்சதாரோ ஆ) இந்தியப்பெருங்கடல் இ) சாஞ்சி ஈ) நர்மதை உ) தட்சசீலம் ஊ) வங்காள விரிகுடா

*********

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com